**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 89/2021**

**1 முதல் 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி–1 சிவக்குமார் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 03.08.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கும், எனக்கும் இடையே தனிப்பட்ட முறையில் உறவோ, பகையோ இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை வருவாய்துறையினர் உட்பிரிவு செய்யும் போது, சட்ட விதிகளுக்கு உட்பட்டுதான் உட்பிரிவு செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவுகள் முறையாக வருவாய்துறை ஆவணங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக மின்இணைப்பு வேண்டுவோருக்கு சட்டத்திற்கு உட்பட்டுதான், ஆவணங்களை பரிசீலனை செய்து மின்இணைப்பு வழங்குவார்கள் என்றால் சரிதான். அ.வ.எண்.203/2018 வழக்கில் அரசு அதிகாரிகள் யாரையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

2) நான் தாக்கல் செய்துள்ள பட்டா மற்றும் வரி ரசீதுகள் எனது ஆவணங்களை பரிசீலனை செய்துதான் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தில் அரசுக்கு சொந்தமான பாதையோ அல்லது புறம்போக்கு நிலமோ உள்ளதா என்றால் இல்லை. 8 முதல் 12 பிரதிவாதிகள் எனக்கு எதிராகவோ, வாதிக்கு எதிராகவோ செயல்படவில்லை என்றால் சரிதான். 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்வதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R.தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**